# வறிய மக்களின் வாழ்வாதாரத்தில் ஸகாத்தின் பங்களிப்பு : கல்முனை முஸ்லிம் பிரதேச செயலகப் பிரிவை மையப்படுத்திய ஒரு சமூகவியல் ஆய்வு

**Supervisor**
*Mr. SM. Ayoob,*
*Senior Lecturer,*
*Faculty of Arts and Culture*

**Researcher**
*Miss. GS. Riyana,*
*Department of Social Sciences,*
*Faculty of Arts and Culture*

ஸகாத் திட்டம் என்பது இஸ்லாமிய அடிப்படையில் வறுமையை ஒழிப்பதற்காக கொண்டுவரப்பட்ட திட்டமாகும். இத்திட்டத்தின் மூலம் வறிய மக்களின் வாழ்வாதார நிலை முன்னேற்றத்திற்கு கொண்டுவரப்படுகிறது. கல்முனை முஸ்லிம் பிரதேசத்தில் வாழ்கின்ற வறிய முஸ்லிம் மக்கள் பல்வேறுபட்ட வாழ்வாதாரப் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். ஆனபோதிலும் இவ் வறிய மக்களின் வாழ்வாதார நிலையை முன்னேற்றுவதற்காக இப் பிரதேசத்தில் ஸகாத் திட்டமானது நடைமுறைப்படுத்தப்படுகின்றது. அந்தவகையில் கல்முனை பிரதேசத்திற்கு உட்பட்ட வறிய மக்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதில் ஸகாத்தின் பங்களிப்பு எவ்வாறு காணப்படுகின்றது என்பதையே இவ் ஆய்வுக் கட்டுரை நோக்கியுள்ளது. கல்முனை பிரதேசத்தில் வாழ்கின்ற வறிய மக்களை அடையாளம் கண்டுகொள்ளல், வறியவர்களது வாழ்வாதார நிலையை அறிந்துகொள்ளல், ஸகாத்தின் மூலம் வறிய முஸ்லிம் மக்களது வாழ்வாதாரம் மேம்படுத்தப்படுகிறதா என்பதை பரிசீலித்தல் மற்றும் ஸகாத்தை வினைத்திறனுடன் வழங்கி வறுமையை ஒழிப்பதற்கான வழிவகைகளைக் கண்டறிதல் ஆகிய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு இவ் ஆய்வு மேற்கொள்ளப்படவுள்ளது. அடிப்படையில் முதலாம் மற்றும் இரண்டாம் தரவு சேகரிப்பு நுட்ப முறைகளைப் பயன்படுத்தி தகவல்கள் சேகரிக்கப்பட்டதுடன், அவ்வாறு சேகரிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் பகுப்பாய்வும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இறுதியாக கல்முனை பிரதேச முஸ்லிம் மக்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதில் இவ் ஸகாத் அமைப்பானது போற்றக் கூடிய வகையில் பங்களித்துள்ளது. இருப்பினும் ஆய்வு பிரதேசத்திலுள்ள வறிய மக்களை சரியான முறையில் அடயாளம் காணமுடியாமை, அனைவரும் ஸகாத் உதவி பெற விரும்புகின்றமை, ஸகாத் வழங்க தகுதியுடையோர் அதற்கு முன்வராமை போன்ற பல பிரச்சினைகளை ஸகாத்தினை நடைமுறைப்படுத்துவதில் எதிர்நோக்குகின்றனர்.

***Key words:*** ஸகாத், வாழ்வாதாரம்